# இசையின் விடுகதை

**ஓவியமும் கவிதையும்: இந்திரன்**



புல்லாங்குழலுக்கு தெரியாது
இன்னமும் இசைக்கப்படாத ராகங்கள்
எத்தனை என்று.

புதிர்கள் நிரம்பிய
அதன் துளைகளைக் கேட்டுப்பாருங்கள்
அவை சொல்லும்
எங்களுக்கும் தெரியாதென்று.

அவை அறிந்ததெல்லாம்
விரல்கள் ஒவ்வொன்றின் தொடுதலிலும்
ஸ்வரம்.

மௌனங்களின் புழுக்கத்தில்
மேய்ப்பர்களின் உயிர் மூச்சு
உள்ளே நிரம்பி வழிகிறபோதெல்லாம்
மிருதுவான உச்சரிப்போடு
பேசத் தொடங்கி விடுகிறது குழல்

ஆனாலும் தெரிவதில்லை
குழலிசையின் விடுகதைக்கு விடை.

மேய்ப்பனின் குழலிசை
மகிழ்ச்சியின் பகுதியா
துயரத்தின் மிகுதியா?